மாலை முரசு

பக்கங்கள் 15

## திருடனின் கத்திக்குத்தில் கட்டடத் தொழிலாளி சாவு

திருடனின் கத்திக்குத்தில் கட்டடத் தொழிலாளி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கையடக்கத் தொலைபேசியைத் திருடிய இரண்டு திருடர்களைத் துரத்திச் சென்ற கட்டடத் தொழிலாளி 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 12 வெள்ளிக்கிழமை 29.09.2023 அதிர்வு 60

# நாட்டின் நீதித்துறைக்கு அதியுச்ச அச்சுறுத்தல்!



## யாழ். நிகழ்வில் சுமந்திரன் எச்சரிக்கை

- எஸ்.நிதர்ஷன் -

"இலங்கையின் சரித்திரத்தில் நீதித்துறைக்கு அதியுச்ச அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. நீதிபதி ஒருவர் தன்னுடைய உயிர் பாதுகாப்புக்காக அதுவும் தான் வழங்கிய ஒரு தீர்ப்பின் அடிப்படையிலே வந்திருக்கின்ற அச்சுறுத்தலின் காரணமாகப் பதவியைத் துறந்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.இதுகுறித்துகவனம்செலுத்த வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கின்றோம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். 04

# மக்களை யார் பாதுகாப்பது?

## சாணக்கியன் ஆதங்கக் கேள்வி



"கொலை மிரட்டல் காரணமாக ஒரு நீதிபதி பதவி விலகி நாட்டை விட்டுத் தப்பிச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இந்நிலையில் நாட்டு மக்களின் நிலை என்ன என்பதைக் கற்பனை செய்து பார்க்க வேண்டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

"சனல் 4 இல் வெளியான தகவல்கள் குறித்து விசாரணை கோரி பதிவிட்ட பல இளைஞர்களுக்குப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு விசாரணைக்கு அழைத்துள்ள போதிலும், சனல் 4 குற்றம் சாட்டியுள்ள ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு எதிராக விசாரணை இடம்பெறவில்லை இல்லை" என்றும் அவர் மேலும் கூறினார்.

### சட்டத்தின் ஆட்சி இல்லாத

# தோல்வியடைந்த நாடே இலங்கை!

## மனோ கடும் விசனம்



"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் சம்பவம், இலங்கையைச் சந்தேகமில்லாமல் ஒரு தோல்வியடைந்த நாடாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்நிலைமை தமிழ் தேசியவாதிகள் மனங்களில் பிரிவினைவாதத்தை நியாயப்படுத்தும் எனவும் நான் அஞ்சுகின்றேன்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

"இந்நிலை திடீரென வரவில்லை. சிங்கள போலி தேசப்பிரேமிகள், நாடாளுமன்றத்துக்கு 04

# அச்சுறுத்தல்களுக்கும் அழுத்தங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து திங்கள் போராட்டம்!

## தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை அழைப்பு

- எஸ்.நிதர்ஷன் -

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா, தனது பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்படுமளவுக்கு, அவருக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களுக்கும் அழுத்தங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை காலை.9.30 மணிக்கு, கிளிநொச்சி பழைய கச்சேரி முன்பாக நடைபெறவுள்ள கண்டனப் போராட்டத்தில் அனைவரையும் இணைந்துக் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்."

– இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

"ஈழத்தமிழர்களின் மரபுவழித் தாயகப் பகுதியான குருந்தூர்மலையின் இருப்பையும், அங்கு தமிழர்கள் வழிபாடியற்றும் உரித்தையும் நிலைநிறுத்தியதற்காகவும், தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை நடாத்துவதற்கு அனுமதித்ததற்காகவும் சிங்கள பேரினவாதத்தால் பழிவாங்கப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு ஏற்பட்ட இந்நிலை, 04

# தேர்தலை அரசு உடன் நடத்த வேண்டும் இதற்கு அழுத்தத்தைப் பிரயோகிப்போம்

## நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவிப்பு

அரசு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்த அரசுக்கு அழுத்தம் பிரயோகிப்போம் என்று பொதுஜன பெரமுனவின் பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (28) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மக்கள் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசை 2019 ஆம் ஆண்டு தோற்றுவித்தார்கள். அப்போது கோட்டபாய ராஜபக்ஷ எடுத்த தவறான தீர்மானங்களால் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் கொள்கைக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்பட்டதால் அரசியல் ரீதியில் நெருக்கடிகள் தோற்றம் பெற்று பாரிய



நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

பொருளாதாரப் பாதிப்பைக் கொண்டு ஒரு தரப்பினர் நாட்டைப் பலவீனப்படுத்த முயற்சித்தார்கள். பொருளாதார பாதிப்பு மத்தியில் நாட்டை ஸ்திரப்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம்.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் நடைமுறைக்குச் சாத்தியமான எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நாங்கள் தெரிவு செய்துள்ளோம் என்பதற்காக அவர் எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் எம்மால் இணக்கம் தெரிவிக்க முடியாது. தவறான தீர்மானங்களுக்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாது.

அரசு தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது. நாடு தற்போது ஸ்திரமடைந்துள்ளது.

ஆகவே அரசு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். பொருளாதாரப் பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு தேர்தலை நடத்தாமல் இருக்க முடியாது.

மக்களாணையைத் தெரிந்துக் கொள்ள அரசு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்துமாறு அரச தலைவர்களுக்கு அழுத்தம் பிரயோகிப்போம்.– என்றார்.

## நில்வலா கங்கைப் பகுதியில்

# வெள்ள அபாய எச்சரிக்கை 24 மணி நேரத்துக்கு நீடிப்பு

நில்வலா கங்கைப் பகுதிக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கையை அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு நீடிக்க நீர்ப்பாசன திணைக்களம் தீர்மானித்துள்ளது.

களுகங்கையின் குடா கங்கை பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கையும் அடுத்த 24 மணிநேரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரத்தினபுரி எலபாத பிரதேச செயலர் பிரிவின் ஊடாக பாயும் ஹங்கமு ஆறு பெருக்கெடுத்து ஓடுவதால் பேருந்துகள் செல்லும் இரண்டு பிரதான வீதிகள், கிளை வீதிகள், வீடுகள் பெருமளவில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எலபாத, கரன்கொட, கினிஹிரிய, திமியா, தம்புலுவன, கஹவத்தை ஊடாக கலத்துர பிரதான வீதி கரங்கொடை பகுதியில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர்வரை வெள்ளம் சூழ்ந்துள்ளதால் பேருந்து போக்குவரத்து உட்பட அனைத்து போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

அத்துடன் இரத்தினபுரி ஹங்கமுவ சந்தி ஊடாக கரவிட்ட பிரதான வீதியும்



இரத்தினபுரி ஹங்கமுவ சந்தி ஊடாக படஎந்திரிய வீதியும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் பேருந்துகள் உட்பட அனைத்து வாகன போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இன்று காலை களுகங்கையின் நீர்மட்டம் குறைந்துள்ள போதிலும் இரத்தினபுரி, நீரல்கம பிரதான வீதி ஏத்தோயா பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதேவேளை, ஜிங் கங்கை பெருக்கெடுத்து ஓடுவதால் தற்போது வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

பத்தேகம உடுகம வீதி, நாகொட குருபனாவ வீதி, பத்தேகம தொடம்கொடை வீதி, அகலியா வீதி மற்றும் பத்தேகம, அகலியா, நாகடை, உனன்விட்டிய, தவலம, ஹினிதும போன்ற பிரதேசங்களின் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர் மழை காரணமாக பண்டாரகம அட்டுலுகம கிம்மாந்துடாவ வீதி மற்றும் கொலமதிரிய கிம்மாந்துடாவ வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக அந்த வீதிகளில் பயணிக்கும் மக்கள் மாற்று வழிகளை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் கிரம ஓயா நிரம்பி வழிவதால் தங்காலை பலதுடுவ வீதி முற்றாக நீரில் மூழ்கியுள்ளது. ஹக்மன பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அக்மன தெவலேகம பிரதேசத் தில் வீடொன்றுக்கு அருகில் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ள. எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

# வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இலவச சட்டச் சேவை வழங்கத் திட்டம்

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு

குறைந்த வருமானமுடைய மக்களுக்கு இலவசமாக சட்டச் சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்குச் செயற்றிறமையான வேலைத்திட்டம் ஒன்றை தற்போது சட்ட உதவி ஆணைக் குழுவால் தயாரித்திருக்கிறோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குச் சட்டத்தின் ஆதிக்கம் சீர்குலைந்தமையும் காரணம் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சட்டம் தொடர்பான அறிவைப் பொது மக்களுக்கு வழங்கும் நோக்கில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் தேசிய சட்ட வாரத்தின் ஆரம்ப நிகழ்வு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தலைமையில் நேற்று (28) கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்-



எமது நாட்டில் சட்டத் தொழில் தொடர்பாக சாதாரண மக்கள் மத்தியில் இருந்து வரும் பிழையான கருத்தைப் போக்குவதற்காக முன்னாள் நீதிபதி சீ.ஜே. வீரமந்திரியால் 2006 ஆம் ஆண்டில் இந்த தேசிய சட்ட வார திட்டம் உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜனநாயக சமூகத்தில் சட்டத்தின் ஆதிக்கத்தின் ஊடாக மக்கள் எதிர்பார்க்கும்நோக்கத்தைநிறைவேற்றுவதற்காகச் சட்டம் தொடர்பான அறிவு மக்களுக்கு தேவையாகும்.

தற்போது சட்ட உதவி ஆணைக் குழுவால் குறைந்த வருமானமுடைய மக்களுக்கு இலவசமாக சட்ட சேவையை பெற்றுக்கொடுப்பதற்காக செயற்திறமையான வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்திருக்கிறோம். அதற்காக ஐரோப்பிய சங்கம், ஆசிய மன்றம், யுனேஸ்கோ மற்றும் யூ.என்.டீ.பி நிறுவனங்களின் ஒத்துழைப்பு வழங்கி இருக்கிறது.

அதேபோன்று மத்தியஸ்த சபை முறையை பலப்படுத்துவதற்காகவும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதற்கும் சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

கடந்த காலத்தில் எமது நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிக்கு சட்ட ஆதிக்கத்தின் வீழ்ச்சியும் காரணமாகும்.

பெருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு இவ்வாறான வேலைத் திட்டங்களை நடத்துவது மிகவும் பயனுள்ளதாகும்.

தேசிய சட்ட வாரத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் சேவைகள் தற்காலத்துக்கு மிகவும் பயனுடையவை ஆகின்றன.

விசேடமாகப் பொது மக்களுக்குச் சட்டம் தொடர்பான புரிதலைப் பெற்றுக் கொடுப்பதற்குச் சட்டத்தரணிகள் சமூகத்தால் மேற்கொள்ளப்படுகின்ற இந்தச் சேவையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு நீதி அமைச்சினதும் அரசினதும் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.- என்றார்.

# தெஹிவளை மிருகக் காட்சிச் சாலையில் சிறுவர் தினத்தில் இலவச அனுமதி

ஒக்ரோபர் முதலாம் திகதி உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு தெஹிவளை மிருகக் காட்சிச் சாலை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களை அன்றைய தினம் பார்வையிடுவதற்கு இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் சிறுவர்களுக்காக பல விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று தேசிய மிருகக் காட்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை மிருகக் காட்சிச் சாலையில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

# சுகாதார விதிமுறைகளை மீறிய உணவகங்களுக்குத் தண்டம்!

(த.சுபேசன்)

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட உணவு கையாளும் நிலையங்களில் சுகாதார விதிமுறைகளை மீறியமைக்காக அதன் உரிமையாளர்களுக்குக் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அத்துடன் தண்டப் பணமும் அறவிடப்பட்டது.



பூநகரி மேற்பார்வை பொதுச் சுகாதாரப்பரிசோதகர்ஆ.ஜென்சன்றொனால்ட் தலைமையில் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து பூநகரி, ஜெயபுரம், நாச்சிக்குடா மற்றும் முழங்காவில் பகுதிகளில் கடந்த வாரத்தில் விசேட உணவுப் பாதுகாப்பு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக உணவு கையாண்டமை, அடிப்படைக் கட்டமைப்புகளைச் சீராகப் பேணாது இருந்தமை ஆகிய குற்றங்களுக்காக ஐந்து உணவு கையாளும் நிறுவனங்களுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட் டிருந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது. அத்துடன் கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டு வழக்குக்குச் சமூகமளிக்காத ஏனைய ஐந்து உணவு கையாளும் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் அந்தந்த பிரதேச பொலிஸ் நிலையங்களூடாக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## நாட்டின் நீதித்துறைக்கு...

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வின் மொழிகள் மற்றும் சமூக அபி விருத்தி பயிற்சி மத்திய நிலையத்தில் சிங்கள மொழி கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு யாழ். மானிப்பாய் – சுதுமலைப் பகுதியிலுள்ள தனியார் விடுதியொன்றில் இன்று காலை சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் சுமந்திரன் எம்.பி. கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்றைக்கு நாடாளுமன்றத்தி னுடைய நிறுவனமயப்படுத்தப்பட்ட பல விடயங்களிலே நாடாளுமன்றம் மட்டுமல்ல நீதித்துறை விசேடமாக ஒரு சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. அது குறித்து கவனம் செலுத்த வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

முதன் முறையாக எங்களுடைய நாட்டின் சரித்திரத்தில் நீதிபதி ஒருவர் தன்னுடைய உயிர் பாதுகாப்புக்காக அதுவும் தான் வழங்கிய ஒரு தீர்ப்பின் அடிப்படையிலே வந்திருக்கின்ற அச் சுறுத்தலின் காரணமாகப் பதவியைத் துறந்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்று இன்றைய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இது நீதித்துறைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அதியுச்சமான ஓர் அச்சுறுத்தல்.

நாட்டிலே இருக்கின்ற சுயாதீனமான நிறுவனங்களைப் பாதுகாக்க வேண்டிய பாரிய கடப்பாடு எங்கள் அனைவருக்கும் இருக்கின்றது. அத்தகைய சுயாதீனமான நிறுவனங்களிலே பிரதானமானது நீதித் துறையாக இருக்கின்றது. நீதித்துறை யைப் பாதுகாக்கின்றபோது நீதிபதிக ளுக்கு அச்சுறுத்தல் செய்வதை நாங்கள் கண்டிக்க வேண்டும் தடுக்க வேண்டும். அதேவேளை, நீதித்துறைக்கு உள்ளேயே தவறுகள் இருந்தால் அதனைத் திருத்து கின்ற வகையிலே நாங்கள் செயற்பட வேண்டும்.

நீதித்துறைக்கு அச்சுறுத்தல் ஏற்படு கின்றபோது மூன்று விதமாக அவர்கள் செயற்படலாம். ஒன்று அந்த அச்சுறுத் தலைக் கணக்கில் எடுக்காமல் தாங்கள் செய்ய வேண்டியதைச் செய்வது, இரண்டா வது அப்படியான அச்சுறுத்தல் வந்தால் அவர்கள் இராஜிநாமா செய்து அதிலி ருந்து விலகுவது, மூன்றாவது நீதிபதிகள் அந்த அச்சுறுத்தலுக்குள்ளாகி அதற்கு அடங்கி தங்களுடைய நடத்தையை அல்லது தீர்ப்பை மாற்றி மற்றவர்களு டைய கைப்பொம்மையாக இயங்குவது. இந்த மூன்றாவது நிலைப்பாடு அது தடுக்கப்பட வேண்டும்.

நீதித்துறையைப் பாதுகாப்பது என் றால் நீதிபதிகள் என்ன செய்தாலும் அவர்களைப் பாதுகாப்பதல்ல நீதிபதி கள் சுயாதீனமாகச் செயற்படுவதை நாங் கள் பாதுகாப்பதே ஆகும்.

இன்றைக்குக் காலையில் வந்திருக் கின்ற இந்தச் செய்தியின் காரணமாக இந்த முக்கியமான எச்சரிப்பை இந்த வேளையில் கொடுக்க வேண்டும் என நினைக்கின்றேன்.

அரசியலை அரசியல்வாதிக– ளிடம் விட்டுவிடுங்கள், நாங்கள் மற்ற வேலைகளைப் பார்ப்போம் என்று சொல்லப்பட்டிருக்கின்றத. அரசியல் என்பது அரசியல்வாதிகளின் கைக ளில் விட்டு விடுவதற்கான இலகுவான விடயம் அல்ல. அது அதி முக்கியமான ஒரு விடயம். அரசியல் என்பது மக்க ளுடைய ஆணையை, மக்களுடைய விருப்பத்தைத் தங்களுடைய பிரதிநிதி கள் மூலமாகச் செயற்படுத்துகின்ற ஒன்று. அது மக்களுக்காக இயங்கு கின்ற ஒன்றாக இருக்க வேண்டும். மக்கள் அதில் தொடர்ந்து ஈடுபடுகின்றவர்களாக இருந்தே ஆக வேண்டும்.

நீங்கள் சிங்களம் கற்பதிலும், சிங்கள மாணவர்கள் தமிழ் கற்பதிலும் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்து இருக்கின் றதோ அதிலும் அரசியல் இருக்கின்றது. அரசியலிலே இதுவொரு முற்போக்கான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற விடயமாக இருக்கின்றது. அந்தவகையில் நீங்கள் சிங்களம் கற்பதும் அரசியல்தான். தொடர்ந்து அரசியலில் ஈடுபடுங்கள். உங்களுடைய பிரதிநிதிகளை நீங்கள் என்ன செய்ய விரும்புகின்றீர்களோ அதைச் செய்ய வையுங்கள்." – என்றார்.

இந்த நிகழ்வில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், முன்னாள் இரா ஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ் வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## அச்சுறுத்தல்களுக்கும்...

தமிழினம் சார்ந்து சிந்திக்கின்ற, இனத்தின் இருப்பை நிலைநிறுத்த நியாயத்தின் பாற்பட்டு கடமையாற்று கின்ற இன்னுமோர் தமிழ் நீதிபதிக்கு ஏற்படக்கூடாது என்பதை வலியுறுத்த வேண்டிய கடமை எம் ஒவ்வொரு வருக்கும் உள்ளது.

நீதியின் செங்கோலை, அதிகாரத் தரப்புகளுக்கும் சிங்களப் பேரினவாதத் துக்கும் சாதகமாக வளைக்க மறுத்த தற்காக ஒரு தமிழ் நீதிபதிக்கு இந்த நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், இந்த நாட்டின் சிறுபான்மை இனமாக அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஈழத்தமிழினத்தின் இருப்பு எவ்வளவு தூரம் சவாலுக்கு உட்படுத்தப்படும் என்பது பற்றி சர்வதேச சமூகத்தின் கவனத்தைக் கோரும் வகையில் இக்கண்டனப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பின ரையும்இணைந்துகொள்ளுமாறுஅழைத்து நிற்கின்றோம்.

இனத்தின் இருப்புக்காகப் பதவி துறந்தி ருக்கும் நீதிபதிக்காக சர்வதேசத்தின் நீதியைக் கோரத் தவறுவது, எங்கள் இனத்தின் இருப்பை இன்னும் வலு விழக்கச் செய்யும் என்பதை உணர்வோம், இணைவோம்." – என்றுள்ளது.

## திருடனின் கத்திக்குத்தில்...

ஒருவர், திருடன் ஒருவரின் கத்திக்குத் துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என்று கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

மொனராகலை, நமுனுகுல பிரதே சத்தில் வசித்து வந்த 29 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையான கே.எம்.தனுஷ்க ருவன் குமார என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

கட்டடத் தொழிலாளிகள் தங்கும் பகுதிக்குள் நுழைந்த இரண்டு திரு டர்கள் அங்கிருந்த கையடக்கத் தொலை பேசியைத் திருடிச் சென்றபோது இரு கட்டடத் தொழிலாளர்கள் திருடர்களைத் துரத்திச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், இருவரும் 100 மீற்றர் தூரம் வரை துரத்திச் சென்று இரண்டு திருடர்களையும் பிடித்துள்ளனர். இதன் போது திருடர்களில் ஒருவர் மறைத்து வைத்திருந்த கூரிய கத்தியால் கட்டடத் தொழிலாளி ஒருவரின் மார்பில் கத்தி யால் குத்தியுள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந் துள்ளது.

சம்பவம் தொடர்பில் கல்கிசைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தோல்வியடைந்த...

உள்ளேயும், வெளியேயும் பகிரங்க மாக தமிழ் நீதிபதிகளை விமர்சித்து, பயமுறுத்தி கொண்டிருந்தார்கள். இலங்கையின் தேசிய தளத்தில் இயங்கும் சிங்கள ஜனநாயக அரசியல்வாதிகளும், முன்னோடி சிவில் சமூகச் செயற்பாட்டாளர் களும், திட மனதுடன் இதைத் தடுத்து, நிறுத்தி, சட்டத்தின் ஆட்சி என்ற தத்துவத் தைப் பாதுகாக்கத் தவறி விட்டார்கள். இது சிங்கள ஜனநாயக அரசியல்வாதிகளுக் கும், சிவில் சமூகத்தினருக்கும் சத்திய சோதனை" – என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா தமது பதவியை இராஜிநாமா செய்து விட்டு, நாட்டிலிருந்து வெளியேறி யமை தொடர்பில் மனோ கணேசன் எம். பி. மேலும் தெரிவித்ததாவது:–

"சட்டத்தின் ஆட்சி என்பது "அதிகாரப் பகிர்வு", "பொறுப்புக்கூறல்" என்பன போன்ற மாற்றுக்கருத்துகள் கொண்ட விடயமல்ல. சட்டத்தின் ஆட்சி என்பது தொடர்பில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. இங்கே முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் உயிருக்கு அச்சுறுத்தல், நாட்டில் எஞ்சி இருந்த கொஞ்ச நஞ்ச சட்ட ஆட்சிக்கும் நேரடி சவாலாக விளங்குகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உடன் நாடு திரும்பி இதற்கு பதிலளிக்க வேண்டும். சட்டமாஅதிபர் சஞ்சய் ராஜரத்தினமும் பதிலளிக்க வேண்டும்.

சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்யும் படி நாம் எப்போதும் போராடி வந்துள் ளோம். ஆனால், அரசு தரப்பில் இதற்கு முழுமையான ஒத்துழைப்பு ஒருபோதும் கிடைக்கவில்லை.

மாத்தளையிலும், இரத்தினபுரியி லும் பெருந்தோட்டங்களில் அத்துமீறிய காணி பிடிப்பை தடுக்கிறோம் எனச் சட்டத் தைக் கையில் எடுத்து பெருந்தோட்ட முகா மையாளர்கள் குழுவினர் வன்முறையில் ஈடுபட்டார்கள். அத்துமீறிய காணி பிடிப்பை அகற்ற சட்டப்படி நீதிமன்ற ஆணைகளை பெற வேண்டும் என நாம், தமிழ் முற்போக் குக் கூட்டணியாக சகோதர எதிர்க் கட்சிகளுடன் இணைந்து, சுட்டிக்காட்டி, நாடாளுமன்றத்தில் சபை நடவடிக்கை களை இடை நிறுத்தி கடுமையாக போரா டிய பிறகுதான், மாத்தளை ரத்வத்தை தோட்ட உதவி முகாமையாளர் ஒருநாள் கைது செய்யப்பட்டார். ஆனால், இரத்தின புரியில் வன்முறையில் ஈடுபட்டு கடும் தாக்குதல் நடத்திய பெருந்தோட்ட முகா மைத்துவ குழுவினர் இன்னமும் கைது செய்யப்படவில்லை.

வடக்குக்குச் சென்று தலைகளைக் கொய்து வருவேன் என்று பகிரங்கமாக சொல்லிய ஒரு முன்னாள் அமைச்சர் கைது செய்யப்படவில்லை. திருகோண மலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெற்ற வேளையில், அடாத் தாக உள்ளே சென்று அரசாங்கக் கடமை களைத் தடுத்து சட்டத்தை மீறிய, பௌத்த மதகுருமார் கைது செய்யப்படவில்லை. தமிழ் நீதிபதிகளை விமர்சித்து, பயமுறுத்தி நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய அரசு தரப்பு அரசியல்வாதிகளை அரசு கட்டுப்படுத்தவில்லை.

ஆகவே இந்நாட்டில் சட்டத்தின் ஆட்சி இல்லை. எனவே இந்நாடு ஒரு தோல்வியடைந்த நாடு. இது சிங்கள ஜனநாயக அரசியல்வாதிகளுக்கும், முன்னோடி சிவில் சமூகத்தினருக்கும் சத்திய சோதனை காலம்." – என்றார்.

# நீதிபதி பதவி விலகிய சம்பவமானது நாட்டின் நீதித்துறைக்கு ஒரு சவால்!



## நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

தனக்கு ஏற்படுத்தப்பட்ட உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாக பதவியை துறப்பதாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா அறிவித்துள்ளமை, நாட்டின் நீதித்துறை எத்தகைய சவால்களை சந்தித்துள்ளது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் இராஜினாமா தொடர்பாக வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பான நீதிமன்ற வழக்கின் தீர்ப்புகள் மற்றும் கள விஜயங்கள் மீதான அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் நீதிபதி அவர்களுக்கு விடுக்கப்பட்டு வந்துள்ளமை இதனூடாக வெளிப்பட்டுள்ளது.

சுயாதீனமாக செயற்பட வேண்டிய நீதிக்கட்டமைப்பை ஆட்டங்காணச் செய்த குறித்த அச்சுறுத்தல்வாதிகளை ஜனநாயக மாண்பற்றவர்களாகவே கருத வேண்டியுள்ளது.

குருந்தூர்மலை வழக்கு தொடர்பாக நீதிபதி சரவணராஜா கடந்த 04.07.2023 அன்று குருந்தூர்மலைக்கு விஜயம் செய்திருந்தபோது தெரிவித்த கருத்துகளை சுட்டிக்காட்டி 07.07.2023 அன்றைய நாடாளுமன்ற உரையிலும், தொடர்ந்து பொதுவிலும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு எதிராக, நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர கடுமையான அவதூறுகளை வெளிப்படுத்தியிருந்தார்.

நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி நீதித்துறையை கேலிக்குள்ளாக்கிய ஒருவரது நிலைப்பாட்டுக்கு அமைவாக நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களமும் செயற்பட்டுள்ளமை அதிர்ச்சியைத் தருகிறது.

குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு சட்டமா அதிபர் மட்டத்திலிருந்தும், அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளமை மோசமான அதிகார துஷ்பிரயோகமாக அமைகிறது.

அத்துடன் நீதிபதிக்கான பொலிஸ் பாதுகாப்பு அண்மையில் குறைக்கப்பட்டிருந்ததோடு, புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக தன்னைக் கண்காணித்து வந்திருந்ததாகவும் நீதிபதியால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக குருந்தூர் மலை வழக்குடன் தொடர்புபடுத்தி தனக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குகள் கோப்பிடப்பட்டுள் என என்றும் இவற்றின் அடிப்படையில் தனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாகத் தான் மிகவும் நேசித்த தனது நீதிபதிப் பதவியைத் துறந்துள்ளார் என்றும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ. சரவணராஜா அறிவித்துள்ளார்.

இந்தப் பதவி துறத்தலானது, பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே இலங்கையின் அனைத்து அரச நிறுவனங்களும் செயற்பட வேண்டும் என்ற கடும் போக்குவாதத்தை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது.

அந்தக் கடும்போக்குவாதத்துக்கு நீதித்துறையும் விலக்கல்ல என்ற துர்ப்பாக்கிய நிலையை கண்டு நான் பெரிதும் கவலையடைந்துள்ளேன்.


தனிநபர்களாலும், அரச கட்டமைப்புகளாலும் வஞ்சிக்கப்படும் மக்கள் சட்டத்தை நம்பி அதை நடைமுறைப்படுத்தும் நீதித்துறையை நாடுகிறார்கள். நீதித்துறை ஒன்றே சுயாதீனமாக செயற்பட்டு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இத்தனை காலமும் இருந்து வந்துள்ளது.

ஆனால் நீதித்துறையையும் வளைத்துப்போடும் வகையில் சிலர் செயற்படும் போது அதை தடுக்காமல் நீதித்துறைக்கு காவலாக இருக்க வேண்டியவர்களே நீதித்துறையின் சுயாதீனத்தை கேள்விக்குட்படுத்தும் போது, நாட்டின் எதிர்காலம் குறித்த அச்சம் மக்களிடம் உருவாக்குகிறது.

ஏற்கனவே இந்த நாட்டின் சட்டங்கள், வடக்கு – தெற்கு என்ற பேதங்களை பார்க்கின்றன என்ற குற்றச்சாட்டு உள்ள நிலையில் இந்த சம்பவமானது அக்குற்றச்சாட்டுகளை இன்னும் வலுச்சேர்த்துள்ளது.

வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல்கள் தொடர்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பணிப்புரைகளையே மீறிச் செயற்படக்கூடிய தரப்புகள் இந்நாட்டை ஆபத்தான பாதைக்கு இட்டுச் செல்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.–என்றுள்ளது.

# பதவியைத் துறந்த நீதிபதி மனிதத்தின் மறு பிம்பமே



## மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவிப்பு

(த.சுபேசன்)

பதவியை உதறித் தள்ளிய நீதிபதி சரவணராஜா மனிதத்தின் மறுபிம்பம் என்று மறவன்புலவு க.சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பதவி விலகலை அடுத்து வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

சங்கு சுட்டாலும் வெண்மை தரும். கெட்டாலும் மேன்மக்கள் மேன் மக்களே. மாவட்ட நீதிபதி சரவணராசா மேல்மகன். பொருளை ஒறுத்தார். பதவியை ஒறுத்தார். வசதிகளை ஒறுத்தார். வாழும் சூழலை ஒறுத்தார். கொள்கை வழி நிற்கிறார்.

தீர்ப்பை மாற்றி எழுதச் சொல்லி யாரைக் கேட்கிறாய்? அநீதிக்குத் தலை வணங்குவேன் என நினைத்தாயோ? அரசியல் அழுத்தங்களுக்காகச் சட்டத்தைப் புரட்டுவேன் என நினைத்தாயோ? அடிமை வாழ்க்கை என்றாலும் ஆணித்தரமான கொள்கை வாழ்க்கை வாழ்கின்றேனடா. போ.. போ.. நீயும் நீ தந்த பதவியும் நீ தந்த வாழ்க்கையும் என்று உதறித் தள்ளிய ஆண்மகன் நீதிபதி சரவணராசா மனிதத்தின் மறுபிம்பம் நீதிபதி சரவணராசா.

போர்த்துக்கேய ஆட்சியில் பசுவைக் கொன்று இறைச்சியைத் தரேன், கிறித்தவனாக மதம் மாறேன் என்ற ஆண்மகன் அன்றைய ஞானப்பிரகாசரின் வழிவந்தவர் இன்றைய நீதிபதி சரவணராசா.

அன்று கத்தோலிக்கரிடம் அடிமையாக இருந்தோம் இன்று புத்தர்களிடம் அடிமையாக இருக்கிறோம்.

நீறுபூத்த நெருப்பாக, ஊதினால் தீயாகும் தணலாக, விடுதலை வேட்கை உள்ளத்தில் கரந்துறைவதன் அடையாளங்களே அன்றைய ஞானப்பிரகாசரும் இன்றைய சரவணராசரும்.

போரின் வெற்றி வீறாப்பில் ஆயுதக் குவிப்பின் எக்காளத்தில் நீதியை உடைக்கலாம், செங்கோலை வளைக்கலாம் என்போருக்குச் சாட்டையடி கொடுத்திருக்கிறார் நீதிபதி சரவணராசா.

வாழ்க அவர் துணிச்சல். வாழ்க அவர் வெற்றி.

ஞானப்பிரகாசர்களையும் சரவணராசாக்களையும் இடையீடின்றி உருவாக்கும் இலங்கைச் சைவத் தமிழ்ச் சமூகம்.– என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நீதிக்கு அச்சுறுத்தல்!

உயிர் அச்சுறுத்தல் மற்றும் அதீத அழுத்தங்கள் காரணமாக முல்லைத்தீவு நீதிவான் சரவணராஜா நாட்டை விட்டுத் தப்பி ஓடிய விவகாரம் இலங்கை நீதித்துறையிலும், அரசியல் வட்டாரங்களிலும் பரபரப்புடன் பேசு பொருளாக மாறி இருக்கிறது.

புலம்பெயர் விவகாரங்களில் இவ்விடயம் மிக மோசமான முன்னுதாரணம் ஆகி விடலாம் என சில வட்டாரங்களை எச்சரிக்கின்றன.

முப்பது ஆண்டுகால யுத்தம் முடிந்த பின்னர், இலங்கையில் இருந்து புகலிடம் தேடி மேற்கு நாடுகளுக்கும் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்றவற்றிற்கும் செல்வோர் விடயத்தில் அந்தந்த நாடுகள் இறுக்கமான போக்கையே கடைப்பிடித்து வருகின்றன என்பது கண்கூடு.

'யுத்தம் முடிந்து விட்டது. இனி அங்கேயே - தாயகத்திலேயே - உங்கள் வாழ்வை பார்க்கலாம். இங்கு வரத் தேவையில்லை' - என்ற பாணியிலேயே அரசியல் தஞ்சம் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களை மேற்கு நாடுகள் கையாண்டு வருகின்றன.

ஆனால் முல்லைத்தீவு நீதிவானின் விவகாரம் சற்று வித்தியாசமானது. ஒரு நீதிபதியே தமிழர் என்பதால் சுயாதீனமாக இயங்க முடியாது, நாட்டை விட்டு ஓட வேண்டும் என்ற அளவுக்கு இக்கட்டு இருக்கும் போது சாதாரண மனிதர்களின் நிலைமை எம்மாத்திரம் என்று முன்னுதாரணமாகக் கேள்வி எழுப்பப்படக்கூடிய நெருக்கடியை இந்த விவகாரம் ஏற்படுத்தியிருக்கின்றது.

புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்களை கையாள்வதில் அடிப்படைத் தார்மீக நிலைப்பாட்டை எந்த மட்டத்தில் வகுத்துக் கொள்வது என்பதில் புதிய நெருக்குவாரத்தை இந்த நீதிவானின் சிக்கல் உருவாக்கி இருக்கின்றது என்பதும் உண்மை.

ஆயினும், அவரது பேட்டி என்ற பெயரில் வெளியான செய்திகளின்படி, இவ்விடயத்தில் சட்டமா அதிபர் தொடர்பில் அவர் குறிப்பிட்ட அம்சங்கள் அவசரப்பட்டு அவர் தெரிவித்த கருத்துக்களாகவே நோக்கப்பட வேண்டி உள்ளன.

ஒரு நீதிவானின் உத்தரவு தொடர்பாக, அந்த நீதிவானுக்கு எதிராக, அவர் பெயர் குறிப்பிட்டு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தடையீட்டு எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்படுவது வழமை. ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள உரிமை அது. பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி விடயத்தில் ஊர்வலத் தடையை மீறி பவனி சென்றவர்களுக்கு எதிரான வழக்கை கல்முனை நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்த போது அந்த நீதிவானுக்கு எதிராக, அவர் பெயர் குறிப்பிட்டு, தடையீட்டு எழுத்தாணை மனு தமிழர் தரப்பினால் தாக்கல் செய்யப்பட்டது.

ஆகவே குருந்தூர்மலை விடயத்திலும் நீதிமன்ற உத்தரவினால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்படும் தரப்பு அத்தகைய மனுச் செய்வதில் தவறில்லை.

அப்படி மனுச் செய்யப்பட்டால், அந்த வழக்கில் நீதிவானுக்காக முன்னிலையாக வேண்டியவர் சட்டமா அதிபரே. ஆகவே அந்த விடயத்துக்காக அத்தகைய நீதிவானை சட்டமா அதிபர் கலந்தாலோசனைக்கு அழைத்துப் பேசுவதும் தப்பில்லை. இந்த எல்லையைத் தாண்டி விடயம் ஏதும் நடந்ததா என்பதுதான் கேள்வி.

சட்டமா அதிபரும் தமிழரே என்ற பின்புலத்தில்தான் இதையும் நோக்க வேண்டி இருக்கின்றது.

எது, எப்படி என்றாலும், தனது இராஜினாமா கடிதத்தில் எழுதப்பட்ட உயிர் அச்சுறுத்தல், அதீத அழுத்தம் என்ற விடயங்களோடு இப்போதைக்கு நீதிவான் நிறுத்திக் கொள்வதுதான் சட்டப் பொருத்தமானதாக இருக்கும்.



## முதலைக்குடா விஞ்ஞான மாணவரை ஆஸ்திரேலியா மைக்கேலிஸ்ட் சந்திப்பு!

(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு மேற்கு வலய முதலைக்குடா மற்றும் அரசடித்தீவு விஞ்ஞான மாணவர்களை ஆஸ்திரேலியா மைக்கேலிஸ்ட் அமைப்பு சந்தித்து கலந்துரையாடியது.

முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் அதிபர் வை .சுந்தர நாதன் தலைமையில் நேற்று (28) வியாழக்கிழமை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் பயின்று ஆஸ்திரேலியாவில் வாழும் அவுஸ்திரேலியா மைக்கேலிஸ்ட் கிளையின் தலைவர் டாக்டர். ரி. சிவசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் இம்முறை வைத்தியத்துறைக்கு தெரிவான மாணவன் சொர்ணலிங்கம் ஜோதிசன் என்ற மாணவனுக்கு தலைவர் டாக்டர் சிவசீலன் லப்டாப் கணினியை அன்பளிப்பு செய்தார்.

இந்த சந்திப்பில் முதலைக்குடா மகா வித்தியாலயம் மற்றும் அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தை சேர்ந்த விஞ்ஞான மாணவர்கள் கலந்து கொண்டனர்.



## மண்முனை பிரதேசத்தில் போதை தடுப்பு நடவடிக்கை!

(பழுவூரான்)

மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவில் போதைப் பொருள் தடுப்பு தொடர்பான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினத்தின் வழிகாட்டலில் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலகம் மற்றும் பொது இடங்களில் பிரதேச மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அலுவலக உத்தியோகத்தர்களால் போதைப் பொருள் தடுப்பு தொடர்பான சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப் படுகின்றன.

பிரதேச செயலக போதைப் பொருள் முற்தடுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் கலாநிதி சசிகரன் போதைப்பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றார்.



# அக்கரைப்பற்று மத்திய கல்லூரி மாணவர்களுக்குக் கருத்தரங்கு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் உயர் கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய பாடசாலை மாணவர்களிடையே நுகர்வோர் விழிப் புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் உயர்தரப் பிரிவு மாணவர்களுகான விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரியின் அதிபர் ஏ.எச் பௌஸ் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது பாவனையாளர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருள்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருள்களின் அரச கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்மந்தமாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இவ் விழிப்புணர்வு நிகழ்சிக்கு பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி இஷட். எம் .ஸாஜீத் மற்றும் புலன் விசாரணை அதிகாரி எம்.எம் இர்ஷாத், ஏ.எல்.எம் சதான் ஆகியோருடன் பாடசாலை உயர்தர பிரிவு ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

# மகிழ்ச்சியான கற்றலுக்கு மாதிரி வகுப்பறைத் திட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது மழ்ஹறுஸ் ஷம்ஸ் தேசிய பாடசாலையில் தரம் 6 தொடக்கம் 8 பகுதியில் முன்னெடுக்கப்பட்ட மாதிரி வகுப்பறைத் திட்டம் வெற்றியளித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபரின் ஆலோசனையின் கீழ் வகுப்பறையை கவின் நிலையாக்குதல் மற்றும் வகுப்பறையின் பௌதீக வளங்களை பேணல் தொடர்பாகப் பெற்றோர்களுடனான கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய பாடசாலை பிரிவுகளுக்கான பகுதித் தலைவர், வகுப்பாசிரியர்களின் அர்ப்பணிப்பில் இத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்களின் சித்திர வேலைப்பாடு கொண்ட ஓவியங்களையும் கற்றலுக்குப் பயனளிக்கக் கூடிய பாடம் தொடர்பான காட்சிப்படுத்தல்களையும் சுவர்களில் காட்சிப்படுத்தி அழகுபடுத்துவது ஒவ்வொரு மாணவரையும் அங்கீகரிப்பதுடன் அவர்களை ஊக்குவிப்பதாகவும் அமைகின்றது.


இவற்றின் ஊடாக ஒரு வகுப்பின் தரத்தை மேலும் அதிகரிக்க முடியும் என்பது திண்ணம். வகுப்பறையின் பிரதானமான குறிக்கோளாக அமைவது மாணவர்களின் கற்றலை மேம்பாடடையச் செய்தலே.



அந்த வகையில் இலகுவாக மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையிலான எளிமை, புதிய விடயங்களைக் கொண்ட உள்ளடக்கம், மாணவர் மகிழ்ச்சியுடன் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடக்கூடிய தன்மை என்பவற்றைக் கொண்டதாக வகுப்பறைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கான திறப்பு விழா பாடசாலையின் அதிபர் திருமதி. எம். சி. நஸ்லின் றிப்காவால் மேற்கொள்ளப்பட்டது.

பிரதி அதிபர்கள் திருமதி. ஜனுல் மர்சூனா மற்றும் எஸ். முபாரக் ஆகியோரும் மற்றும் முகாமைத்துவக் குழுவின் சார்பாகச் சிரேஷ்ட ஆசிரியர் ஏ.எம்.அஜ்வத்கும் கலந்து கொண்டனர்.



# பெரியவிளான் பாடசாலையில் திறன் வகுப்பறை திறந்துவைப்பு

இளவாலை பெரியவிளான் றோ.க. த.க. பாடசாலையில் திறன் வகுப்பறை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப் பாளரின் கோரிக்கைக்கமைவாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பு மற்றும் இரட்ணம் பவுண்டேசன் ஆகியன முதலாம் கட்டத்தில் பன்னிரண்டு பாடசாலைகளிலும் இரண்டாம் கட்டத்தில் ஒன்பது பாடசாலைகளிலும் திறன் பலகையுடனான திறன் வகுப்பறைகளை ஆரம்பித்து வைத்துள்ளன.

இவற்றில் இரண்டாம் கட்டத்தில் வழங்கப்பட்ட ஒன்பது பாடசாலைகளில் ஒன்றான பெரியவிளான் றோ.க.த. பாடசாலையில் திறன்வகுப்பறையை திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திறன்பலகை தொடர்பாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் , மாணவர்களுடனான பங்குபற்றுதலுடன் வகுப்பறைச் செயற்பாடுகள் மிகவினைத்திறனான முறையில் நிகழ்த்தி காட்டப்பட்டிருந்தது.

இந்த ஆரம்ப நிகழ்வுகளில் வலய பிரதிநிதிகளுடன், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.





# கல்முனை கார்மல் பற்றிமாவின் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கு அமைவாக, மாணவர் நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர் களை தெரிவு செய்யும் நிகழ்வுகள் கல்முனை கார்மல் பற்றிமா தேசியக் கல்லூரியில் அதிபர் அருட் சகோதரர் எஸ்.ஈ.றெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

ஜனநாயக ரீதியான தேர்தல் முறைமை ஒன்றின் அனுபவங் களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் வாக்களிப்பில் கலந்து கொண்டனர்






# 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிண்ணியா மத்திய கல்லூரி ஊர்வலம்

**(ஹஸ்பர்)**

கிண்ணியா மத்திய கல்லூரியின் 65 ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு நேற்று ( 28) காலை எட்டு மணிக்கு நடைபவனி இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் சுமார் 2500 இற்கு மேற்பட்ட மாணவர்கள், பழைய மாணவர்கள், கிண்ணியா வலயக் கல்வி அதிகாரிகள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள் கலந்து கொண்டனர்.

கிண்ணியா மத்திய கல்லூரி வளாகத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலமானது கிண்ணியா புகாரியாடி சந்தி ஊடாக சென்று பெரிய பாலத்தின் ஊடாக மீண்டும் கிண்ணியா மத்திய கல்லூரியை சென்றடைந்தது.

1958 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுகின்றது. அதன் முதல் கட்டமாக நடைபவனி இன்று இடம் பெற்றது.





# உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே சித்திரப் போட்டி

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு காலி,மஹமோதர சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா கல்லூரியில் மாணவர்களிடையே சித்திரப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. காலி மாவட்டத்துக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையிலும், மாணவர்களின் மனங்களில் உல்லாசப் பயணிகள் சம்பந்தமாக பதியப்பட்டிருந்த விடயங்களும் கருத்தா ளமிக்கதாக வரையப்பட்ட சித்திரங்களில் அமைந்திருந்தது.

# கணினிகள் அன்பளிப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை ஜாமியா மன்பயில் ஹிதாயா அரபுக் கல்லூரிக்கு, கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இதுவரை நீண்ட நாள் தேவையாக இருந்த ஒருதொகை கணினிகள் றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி சமூக சேவை அமைப்பால் அன்பளிப்பு செய்யப்பட்டன.

றிஸ்லி முஸ்தபா அவர்களது சொந்த நிதியிலிருந்து கணினிகள் உத்தியோ பூர்வமாக வழங்கி வைக்கப்பட்டன.



உங்கள் வாழ்க்கையை ஆரோக்கியமான, வெற்றிகரமான வாழ்க்கையாக வாழ

sky Yoga

மனவளக்கலை

**sky Yoga**

நான்கு நாள் சிறப்பு பயிற்சி நெறி

செப். 28 முதல் ஒக்.01 ஆம் திகதி வரை | நேரம் : 09.00 - 12.00

தொடர் விடுமுறை நாட்களை முன்னிட்டு இலங்கை மனவளக்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டு பயிற்றுவிப்பாளர்களால் நடாத்தப்படும் **sky Yoga ஆரம்ப நிலை பயிற்சிகள் (Sky Yoga Foundation Course )**

- எளிமையான யோகாசனப் பயிற்சிகள் ( Simplified Yoga Asanas )
- தியான பயிற்சிகள் ( Meditation )
- காயகல்ப பயிற்சிகள்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்

இடம் :
கொழும்பு அறிவுத்திருக்கோயில்
**sky Yoga Center**
53 - 1 / A, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு 06.

தொடர்புகளுக்கு :
0779 371 846
0777 364 885
0774 951 607






■ அஸ்ஹர் இப்றாஹிம்

இதய நோய் பாதிப்புகள் குறித்து அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகம் ஆய்வொன்றை நடத்தியது. அதில் மனஅழுத்தம், உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு இதயச் செயல்பாடு பாதிக்கப்படுவதுடன் இளம் வயதிலேயே மரணம் நிகழ்வது கண்டறியப்பட்டது. மேலும், தூக்கமின்மையும் இளைஞர்களைப் பெருமளவு பாதிப்பது தெரிய வந்துள்ளது.

உடல் இயக்கத்துக்கு அடிப்படையாக இருப்பது இதயம். வாழ்வியல் மாற்றங்களால் அதன் செயல்திறன் பாதிக்கப்படும்போது, உடலின் அனைத்து உள்ளுறுப்புகளும் பாதிப்புக்குள்ளாகும். இதய ஆரோக்கியத்தைப் பொறுத்தே ஒருவரது ஆயுள்காலம் அமையும் என்பதால், இந்த ஆய்வு முடிவு ஒரு எச்சரிக்கை மணியாக இருக்கிறது. 'இளம் தலைமுறை இதய நலனில் கூடுதல் அக்கறை செலுத்த



# உலக இதய தினம்

## (29 செப்டம்பர்)

வேண்டும்' என்று அந்த ஆய்வின் முடிவில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதய நோயானது தற்போது வயதானவர்களை மட்டுமின்றி இளைஞர்களையும் அதிகம் பாதிக்கும் தொற்றா நோய்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த நோய் மூலம் இறக்கும் நோயாளர்களில் 40 வீதமானவர்கள் இதய இரத்த நாடிகளின் அடைப்பின் மூலம் இறக்கின்றனர்.

வீடு, விளையாடும் சூழல் , பணிபுரியும் அலுவலகம் போன்றவற்றில் இதயத்துக்கு இதமான ரம்மியமான சூழலை உருவாக்க வேண்டும் . உலக அளவில் இன்று இதய நோய் ஒரு பெரும் சவாலாகவே உள்ளது. அதிலும் மாரடைப்பு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

மாரடைப்பு ஏற்படும் 100 பேரில் 20 பேர் உயிரிழக்கின்றனர். கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு 50, 60 வயதுகளில் வந்த இதய நோய், தற்போது 30 வயது இளைஞர்களுக்கே வருகிறது.

வாழ்க்கை முறை மாற்றம், மாறி வரும் உணவுப் பழக்கத்தால் ஏற்படும் உடல் பருமன் அதிகரிப்பு , குறைந்த அளவில் உடற்பயிற்சி மேற்கொள்ளல், அதிகளவில் கரையும் கொழுப்புகள் உண்ணுதல், மன நிம்மதியின்மை, குறைந்தளவில் மரக்கறி வகைகளையும் பழவகைகளையும் உண்ணுதல், சுகாதாரத்துக்கு அப்பாற்பட்ட உணவுப் பழக்க வழக்கம், இரத்த அழுத்தம், நீரழிவு நோய், புகைத்தல் மற்றும் மதுப்பழக்கம் போன்றவை இதய நோய்கள் வருவதற்கு காரணங்களாக அமைகின்றன.

இவை தவிர இதய இரத்தக் குழாய்கள் சுருங்குதல் மற்றும் வீங்குதல், இதய தசைகள் செயலிழத்தல், இதயம் செயலிழந்து போதல், இதய துடிப்புகளில் பிரச்சினை போன்ற இதய நோய்களும் உள்ளன.

இதய நோய்களால் பாதிக்கப்படும் 80 சதவீதம் பேரை மாத்திரைகளால் குணப்படுத்திவிட முடியும். 20 சதவீதம் பேருக்குத்தான் அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது. இதய நோய்களுக்கு பல நவீன சிகிச்சை முறைகள் வந்துள்ளன.

குருதியில் கொலஸ்ரோலின் அளவு அதிகரிப்பதே இதய நோய்க்கு முக்கிய காரணியாக அமைகின்றது. கொலஸ்ட்ரோல் ஒருவகை மெழுகுத் தன்மையுடைய கொழுப்புப் பதார்த்தமாகும். இது தேவைக்கு அதிகமாக ஒருவரின் குருதியில் காணப்படுமிடத்து அவரின் மிகவும் நுன்னிய மயிர்த்துளை நாடிகளில் படிய ஆரம்பிக்கின்றது. எனவே இதயத்திலும் மூளையிலும் உள்ள நாடிகளில் தான் அதிகம் படிய வாய்ப்புகள் உள்ளதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இதயத்தில் படிந்து நோய் நிலையைத் தோற்றுவிப்பதை இருதய நோய் (Cardio vascular disease ) என்றும் , மூளையில் படிந்து நோய் நிலையை உருவாக்குவதை பாரிச வாதம் அல்லது பக்கவாதம் ( cerebro vascular disease) என்று கூறப்படுகின்றது.

கொலஸ்ட்ரோலானது குருதியில் பயணம் செய்யக் கூடிய விதத்தில் உள்ள துணிக்கையை லிப்போபுரட்டின் ( lipoprotein) என்று அழைக்கப்படும். அத்துடன் இது குருதியிலுள்ள கொழுப்பும் புரதமும் ஒன்று சேர்ந்து உருவாகிய நிலையில் காணப்படும்.

கொலஸ்ட்ரோல் குருதியில் அதிகளவில் காணப்படுமிடத்து திண்மத் தன்மையுடைய மெழுகு படிவுகள் மயிர்த்துளை நாடிகளின் உட்புறம் படியத் தொடங்கும் . இதன் விளைவுகள் மூலம் குருதியின் ஓட்டத்தை தடை செய்வதுடன் சில நாடள்களின் பின் அல்லது சில மாதங்களின் பின் இதய அடைப்பு ( Heart Attack ) > my;yJ %isapDs; ehb milg;G ( Stroke ) ஏற்பட வாய்ப்புகள் அதிகரிக்கின்றது.

இதய நோய்களில் மாரடைப்பு முக்கிய பிரச்சினையாக உள்ளது. நெஞ்சுப் பகுதியில் இருந்து ஒருவித வலியுடன் கூடிய நெஞ்சடைப்பு , மூச்சு வாங்குதல் அதாவது சுவாசிப்பதற்கு கஷ்ரப்படல், அதிகம் நடக்கும் போது அல்லது படிகளில் ஏறும் போது இளைப்பு ஏற்படுதல், கால்களில் அல்லது கைகளில் வலி, நோவு, விறைப்பு ஏற்படுதல், வயிற்றுப் பகுதியில் அழுத்தம் கொடுத்தல், மூச்சுத் திணறல், திடீர் மயக்கம், உடல் வலி, சோர்வு போன்றவை மாரடைப்பின் அறிகுறிகளாகும்.

மாரடைப்புக்கான அறிகுறிகள் இருந்தாலோ அல்லது திடீரென மாரடைப்பு வந்து வந்து விட்டாலோ, அருகில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைப் பெற வேண்டும்.

மது, புகைப் பழக்கத்தை விட்டுச் சத்துள்ள உணவை உட்கொள்ள வேண்டும். உணவுடன் காய்கறிகள், கீரைகள், பழங்கள் போன்றவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

வயிறு நிறையச் சாப்பிடுவதை விட்டுவிட்டுக் குறைவாக சாப்பிட வேண்டும். தினமும் உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும். இவற்றை தொடர்ந்து கடைப்பிடித்து வந்தாலே இதய நோய்கள் வராமல் 80 சதவீதம் தடுக்க முடியும்





## ஏறாவூர் பற்று பிரதேசத்தில் அப்பியாசக் கொப்பி வழங்கல்

(பழுவூரான்)

ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தில் சமுர்த்தி சமுதாய அடிப்படை மாணவர் சக்தி (சிசுபல) சமூக நலன்கள் திட்டத்தின் கீழ் அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் .கோ.தனபாலசுந்தரம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது செங்கலடி பிரதேசத்தில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் விநியோகிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், தலைமையக முகாமையாளர், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



## வீதியை விட்டு விலகி கார் விபத்து

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையில் நேற்று (28) இரவு சிறிய ரக கார் ஒன்று வீதியை விட்டு விலகித் தலை கீழாக விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதிக வேகமே விபத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊடக மாணவருக்கு பயிற்சிப் பட்டறை



(மஸ்கெலியா நிருபர்)

நுவரெலியா வலயத்துக்கு உட்பட்ட சிங்கள ஊடக பாடசாலை ஊடகவியலாளர் மன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் துவா சிறார்களுக்கான ஒரு நாள் பயிற்சி பட்டறை நேற்று (28) நுவரெலியாவில் நடைபெற்றது.

இங்கு பத்திரிக்கை கலை, வீடியோ எடுத்தல், புகைப்படம் எடிட்டிங், நிகழ்ச்சிகளை வழங்குதல் மற்றும் உள்ளூர் ஊடகவியலாளர்களின் பொறுப்புகள் மற்றும் பாத்திரங்கள் குறித்து பள்ளி மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

லிட்டில் இங்கிலாந்து நலன்புரி அறக்கட்டளை, நுவரெலியா பிராந்திய கல்வி அலுவலகத்துடன் இணைந்து, மூத்த ஊடகவியலாளர் புரக ரங்கன டி சில்வா மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் ரஞ்சித் ராஜபக்ஷ ஆகியோரின் வளங்களோடு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் மற்றும் நுவரெலியா பிராந்திய கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஊடக மன்றங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், லிட்டில் இங்கிலாந்து நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ஜே. ஏ.எம். நளீர், அமைப்பாளர், ஊடகவியலாளர் ஆர்.எப்.எம்.சுஹெல் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.



## கல்முனை பொதுச்சந்தையில் நபி விழா

(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்கத்தினரால் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்பட்டு வருகின்ற மீலாதுன் நபி விழா இம்முறையும் பொதுச்சந்தை வளாகத்தில் இடம்பெற்றது .

இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி, பிரதேச செயலாளர் ஏ.ஜே.லியாகத்அலி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸின் செயலாளர் நிலாம் உட்பட வர்த்தக பிரமுகர்கள், அரச உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.







# மாணவர்களுக்கு கௌரவிப்பு

(பொகவந்தலாவ நிருபர்)

மலையக கலாச்சார ஒன்றியத்தில் ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவ பொகவான கில்லாரனி தமிழ் வித்தியாலயத்தின் புலமை பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று (28) வியாழக்கிழமை காலை வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் அதிபர் முத்துலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பொகவான கில்லாரனி தமிழ் வித்தியாலயத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் பாடசாலை மலையக கலாச்சார ஒன்றியத்தினால் பொன்னாடை போத்தி நினைவு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மலையக கலாச்சார ஒன்றியத்தின் தலைவர் சிவராஜேஸ்வரன் உட்பட அதன் உறுப்பினர்கள், பத்தனை தேசிய ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளர் ராமகிருஷ்ணன் மற்றும் அயல் பாடசாலையின் அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



# திருகோணமலையில் நடந்த உலக சுற்றுலா தின நிகழ்வு

(ஹஸ்பர்)



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் இணைந்து சுற்றுலா வாரத்துக்கான நிகழ்வுகளை நேற்று முன்தினம் (27) திருகோணமலை கடற்கடையில் நடத்தின.

கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தவிசாளர் ஏ. பி.மதனவாசகன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றுலா வாரத்துக்கான நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்த ஆரம்ப நிகழ்வுக்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரல, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண விளையாட்டு திணைக்கள பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ், மாகாண உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

# 5 மாநில தேர்தலில் அதிக எம்.பி.க்களை களமிறக்குவதற்கு பா.ஜ.க. தீர்மானம்!




அடுத்த வருடம் நடைபெறவுள்ள மக்களவை தேர்தலுக்கு முன்பாக ராஜஸ்தான், மத்தியபிரதேசம், சத்தீஸ்கர், தெலங்கானா, மிசோரம் ஆகிய 5 மாநிலங்களில் தேர்தல் நடைபெற உள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கான அரையிறுதிப் போட்டியாகக் கருதப்படும் இந்த தேர்தலின் வெற்றி மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது. 5 மாநிலங்களில் மத்தியபிரதேசத்தில் மாத்திரம் பா.ஜ.க. ஆட்சியில் உள்ளது. மிசோரமில் ஆளும் மிசோரம் தேசிய முன்னணியின் கூட்டணிக் கட்சியாக உள்ளது.

இதனால் நான்கு மாநிலங்களிலும் வெற்றிபெற்று ஆட்சி அமைக்க பா.ஜ.க. பல புதிய திட்டங்களை வகுத்து வருகிறது. இதில், முக்கியமாக தனது எம்.பி.க்களையே அதிக எண்ணிக்கையில் களம் இறக்க முடிவு செய்துள்ளது.

இந்த வகையில், மத்திய பிரதேசத்தில் 3 மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட 7 எம்.பி.க்கள் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இதேபோல், சத்தீஸ்கரின் 90 சட்டப்பேரவை தொகுதிகளின் பலவற்றிலும் தனது மாநில தலைவரான அருண் சாவ் உள்ளிட்ட பல எம்.பி.க்களை களம் இறக்க பா.ஜ.க. முடிவு செய்துள்ளது.

ராஜஸ்தானிலும் தனது பல எம்.பி.க்களை வேட்பாளர்களாக்க பா.ஜ.க. திட்டமிடுகிறது. இந்தப் பட்டியலில் மத்திய அமைச்சர்கள் அர்ஜுன்ராம் மேக்வால், கஜேந்திர சிங் ஷெகாவத் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

இதேவேளை, ராஜஸ்தானில் ஒரு கட்சியின் ஆட்சி இரண்டாவது முறையாக தொடராத நிலை பல ஆண்டுகளாக உள்ளது. இருப்பினும் பா.ஜ.க. சுணக்கம் காட்டாமல் வெற்றிக்கான தீவிர நடவடிக்கையில் இறங்கி உள்ளது.

தெலுங்கானாவில் பா.ஜ.க. விற்கு 4 எம்.பி.க்கள் உள்ளனர். இவர்களில் மத்திய சுற்றுலா அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி உள்ளிட்ட அனைவரையும் சட்டப்பேரவை தேர்தலில் நிறுத்தும் வாய்ப்புகள் உள்ளன. எம்.பி.க்களுக்கு உள்ளதேசிய செல்வாக்கு சட்டப்பேரவை தேர்தலில் வெற்றியை பெற்றுத்தரும் என்பது பா.ஜ.கவின் அரசியல்கணக்காக உள்ளது.

# ஆண்டனி பிளிங்கனுடன் எஸ். ஜெய்சங்கர் சந்திப்பு



அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஆண்டனி பிளிங்கனை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சேங்கர் சந்தித்துள்ளார்.

இந்த நிலையில். கனடா பிரச்சினை குறித்து இருவரும் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்க மறுத்துள்ளனர்.

காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் நிஜ்ஜார் கொலையால் இந்தியா – கனடா இடையே மோதல் வலுத்துள்ளது. இந்த நிலையில் அமெரிக்கா சென்றுள்ள வெளிவிவ
கார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஆண்டனி பிளிங்கனை சந்தித்துள்ளார்.

தனது அண்டை நாடான கனடாவும், தெற்காசியப் பிராந்தியத்தில் முக்கியமான நாடாக விளங்கும், அதுவும் குறிப்பாக சீனாவை எதிர்கொள்ள முக்கிய பங்காளியாக இருக்கும் இந்தியாவும் உரசலில் உள்ள சூழலில் அமெரிக்கா இந்தச் சர்ச்சையில் மிகக் கவனமாக செயல்படும் நிர்பந்தத்தில் உள்ளது.

இந்தச் சூழலில் அமெரிக்க – இந்திய வெளியுறவு அமைச்சர்கள் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் காலிஸ்தான் பிரிவினைவாதி கொலை சர்ச்சை பற்றி எதுவும் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இருவரும் தனிப்பட்ட முறையில் ஆலோசித்தபோது விசாரணையில் கனடாவுக்கு உதவ வேண்டும் என்று இந்தியாவுக்கு பிளிங்கன் அறிவுறுத்தியுள்ளார் என பெயர் குறிப்பிட விரும்பாத வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

# கன்னடர்கள் சார்பில் மன்னிப்பு கேட்கிறேன்: பிரகாஷ் ராஜ் கருத்து

நடிகர் சித்தார்த்தின் திரைப்பட விழாவில் கன்னட அமைப்பினர் கோஷங்கள் எழுப்பியிருந்தனர்.

அந்தச் சம்பவத்துக்காக அனைத்து கன்னடர்கள் சார்பிலும் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என நடிகர் பிரகாஷ்ராஜ் தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவைப் பூர்வீமாகக் கொண்ட நடிகர் பிரகாஷ்ராஜ் தமிழில் பல காலமாக வெற்றிகரமான நடிகராக இருக்கிறார்.

தமிழ் மட்டுமல்லாது தெலுங்கு, கன்னடம், இந்தி என அவர் தடம் பதித்த களங்கள் பல. சினிமாவில் பிரபலமான பிரகாஷ்ராஜ் அவ்வபோது தனது சமூக வலைதளங்களில் அரசியல் கருத்துகளைப் பதிவிடுவது வழக்கம்.

இந்தநிலையில், சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள அவர், மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக் கோத எம்.பி.க்களைக் கேள்வி கேட்காமல், சாமான்ய மக்களை கொடுமைப் படுத்துவதும், கலைஞர்களை இம்சிப்பதும் தவறு.

அனைத்து அன்பான கன்னடிகர்கள் சார்பிலும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் என்று நடிகர் சித்தார்த்திடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

# கொலைகாரர்களின் கூடாரமாக கனடா மாறிவிடக் கூடாது!

## பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் சாடல்



கனடா கொலைகாரர்களின் கூடாரமாகி விடக் கூடாது என பங்களாதேஷ் வெளி விவகார அமைச்சர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில், கனடா கொலைகாரர்களின் கூடாரமாகி விடக் கூடாது.

கொலையுண்டவர்களின் குடும்பம் கஷ்டத்தில் இருக்கும்போது, கொலையாளி களால் கனடாவில் தஞ்சமடைந்து, அங்கே அவர்களால் அற்புதமான வாழ்க்கையை வாழமுடிகிறது. கனடாவின் இந்த நிலைப்பாடு, மற்றும் மரண தண்டனைக்கு எதிரான அதன் நிலைப்பாடு காரணமாக அந்நாடு குற்றவாளிகளின் பாதுகாப்புக் கவசமாக மாறி வருகிறது.

மனித உரிமைகள் பற்றிய கருத்து பலரால் பல நேரங்களில் தவறா கப் பயன்படுத்தப்படுகிறது. இது உண் மையில் துரதிர்ஷ்டவசமானது.

ஏனென்றால் கொலையாளிகள் மற்றும் பயங்கரவாதிகளை பாதுகாக்க மனித உரிமைகள் சில நேரங்களில் பயன்படுத் தப்படுகின்றன.

இந்தியாவுடன் நாங்கள் நல்ல உறவைக் கொண்டுள்ளோம், கனடாவுட னுடம் நல்ல உறவைக் கொண்டுள்ளோம். இரு நாடுகளும் எங்களுக்கு நண்பர்கள். கனடா குற்றவாளிகளின் கூடாரமாக இருக்கக் கூடாது. நாங்கள் சிலரை உடன டியாக நாடு கடத்துமாறு கனடா அரசிடம் கோரிக்கை வைத்துள்ளோம்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, தற்போது அவர்கள் அந்தப் பிரச்சினை குறித்து எங்களிடம் பேசுவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

# நெதர்லாந்தில் துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலி!



நெதர்லாந்து ரொட்டர்டொம் நகரில் நடத்தப்பட்ட இரட்டை துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை, நெதர் லாந்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

32 வயதான சந்தேகநபர், நேற்றைய தினம் இந்த துப்பாக்கி பிரயோகத்தை நடத்தியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பல்கலைக்கழக மாணவரான அவர், 39 வயதுடைய பெண் ஒருவரையும் அவரது 14 வயதுடைய மகளையும் சுட்டுக் கொலை செய்துள்ளார்.

பின்னர், பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஒருவர் மீதும் துப்பாக்கி பிரயோகம் நடத்தியுள்ளார் என குறிப் பிடப்படுகின்றது.

எவ்வாறாயினும், அவர் இந்த துப்பாக்கி பிரயோகத்தை நடத்திய மைக்கான காரணம் இதுவரை தெரிய வரவில்லை.

சம்பவம் தொடர்பான விசாரணை களை நெதர்லாந்து பொலிஸார் முன் னெடுத்து வருகின்றது.

# ஹெரி பொட்டர் திரைப்பட நடிகர் மரணம்!



ஆங்கிலத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பிரபல்யமான பிரபல ஹொலி வூட் திரைப்படமான ஹெரி பொட்டரில் பணியாற்றிய செர் மைக்கெல் நேற்று காலமானார்.

உடல் நலக்குறைவால் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர், சிகிச்சை பலனின்றி தமது 82 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.

ஹெறி பொட்டர் திரைப்படத்தின் 8 பாகங்களில் 6 பாகங்களிலும் இவர் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க தாகும். இவருடைய மறைவுக்கு சினிமா பிரபலங்கள், ரசிகர்கள் என பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

செர் மைக்கெல் தொலைக்காட்சி, திரைப்படங்கள், வானொலி என பல்வேறு பிரிவுகளில் பணியாற்றியுள்ளார்.